கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை

அசல் வழக்கு எண் **234/2019**

பிரதிவாதி தரப்பு சாட்சி –1 சந்திரன் திரு. M.பெரியசாமி, இளநிலை உதவியாளர் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டும் 04.03.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும். எத்தனை சர்வே எண்களில் உள்ள சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியாக நியாபகம் இல்லை. சர்வே எண்.757/9C, 757/9A, 757/10A, 756/9B ஆகிய சொத்துக்களுக்கு வழக்கு செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் ராசமூப்பனுக்கு சுயார்ஜ்ஜிதமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி சொத்துக்கள் இல்லாமல் ராசமூப்பனுக்கு அவர் கிரையம் பெற்ற இதர சொத்துக்களும் உள்ளன என்றால் சரிதான். மேற்படி ராசமூப்பனுக்கு பாத்தியப்பட்ட இதர சொத்துக்களை தான் அவரது பேரனான முத்தலிங்கத்திற்கு தானசெட்டில்மென்ட் செய்துள்ளார் என்றால் சரிதான்.

2. மேற்படி முத்தலிங்கத்திற்கு எழுதிகொடுத்த ஆவணத்தின் நகலை தான் இவ்வழக்கில் பி.சா.ஆ.2 ஆவணமாக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.சா.ஆ.2 படி முத்தலிங்கத்திற்கு முழுமையான பாத்தியப்பட்ட சொத்தை தான் அவர் பி.சா.ஆ.1 கிரைய ஆவணம் மூலம் விற்கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். முத்தலிங்கத்திற்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்தை தான் அவர் கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. ராசமூப்பன் சொத்துக்களான தாவா சொத்துக்களை பொறுத்து அவர் உயிருடன் இருந்த சமயத்தில் யாருக்காவது ஆவணம் எழுதி பாத்தியப்படுத்தியுள்ளாரா என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் பொது குடும்ப சொத்துக்கள் என்றால் சரிதான்.

3. பொது குடும்ப தாவா சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை எதுவும் செய்து கொள்ளவில்லை என்றால் சரிதான். மேற்படி பொது குடும்ப சொத்துக்கள் எனது மேற்பார்வையில் உள்ளது என்றால் சரிதான். ராசமூப்பன் சொத்துக்களுக்கு தான் எனது பெயரிலும், எனது சகோதரர்

சீனிவாசன் பெயரிலும் தனிப்பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி தனிப்பட்டாவை வைத்து கொண்டு சொத்துக்கள் தனக்கு மட்டுமே பாத்தியப்பட்டதாக விற்கிரையம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ராசமூப்பன் தாவா சொத்துக்களை கடந்த வா.சா.ஆ.1 ஆவணத்தின் மூலம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

4. தாவா சொத்துக்களை ராசமூப்பன் சுயமாக கிரையம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். சர்வே எண்.757/9C, 757/9A, 757/10A ஆகிய சொத்துக்களுக்கு UDR ல் எனது பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது அனுபவத்தின் அடிப்படையில் பட்டா ஏற்பட்டது. சர்வே எண்.756/9B ற்கு எனது பெயரில் உள்ள பட்டாவை பயன்படுத்தி இந்தியா சிமெண்ட் நிறுவனத்திற்கு கிரையம் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சர்வே எண்.756/9B ற்கு எனது பெயரிலும், இந்தியா சிமெண்ட் நிறுவனத்தின் பெயரிலும் கூட்டு பட்டாவாக உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரையம் எழுதி கொடுத்ததை தவிர 7 முதல் 8 பிரதிவாதிகளான இந்தியா சிமெண்ட் நிறுவனம் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரிதான்.

5. மேற்படி விவரம் தெரிந்த பிறகு, வில்லங்க சான்றிதழை பார்த்த பின்பு, தாவா சொத்து பொது குடும்ப சொத்து என்றும், பிரிவினையில்லாத சொத்தை யாருக்கும் விற்கிரையம் செய்ய கூடாது என்று கூறி வாதி வா.சா.ஆ.4 அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.4 அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். மேற்படி நான் கொடுத்த பதில் அறிவிப்பை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு தெரியாது. நான் பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தால், அதனை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றும், அவ்வாறு அனுப்பாததால் தான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

6. சர்வே எண்.757/9C சீனிவாசன் பெயரிலும், சந்திரன் பெயரிலும் கூட்டு பட்டாவில் இருந்தது என்றும், அதன் பின்னிட்டு எதன் அடிப்படையில் மேற்படி சர்வே எண்ணிற்கு சீனிவாசன் பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டது என்றால் வீடு கட்ட வேண்டும் என்று சீனிவாசன்

பெயரில் மாற்றி கொண்டோம். சர்வே எண்.757/9B தவிர மற்ற நிலங்களை பொது குடும்ப சொத்துக்களாக நான் தான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். மேற்படி தனிப்பட்டா ஏற்பட்ட நிலங்களின் பத்திரங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து எந்த வருடம் எனக்கு எனது தந்தை பிரித்து கொடுத்ததாக நான் சொல்கிறேன் என்றால் சுமார் 40 வருடங்கள் மேலாக இருக்கும்.

7. சர்வே எண்.760, 760/1 ஆகிய நிலங்கள் ராசமூப்பன் 17.07.1986 ல் அவருடன் உயிருடன் இருந்த காலத்திலே அவரது வாரிசுகளுடன் சேர்ந்து விற்கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரையத்திற்கு முன்பே பாகப்பிரிவினை ஏற்பட்டது. பாகப்பிரிவினைக்கு பின்பு தான் பொது குடும்ப சொத்தை மேற்படி விற்கிரையம் செய்துள்ளோம் என்றால் சரிதான். 24.07.1986 ல் ராசமூப்பன் தனது இளவர் மகன்களை கட்டுப்படுத்தி பழனியம்மாளுக்கு சர்வே எண்.760, 760/1L நிலங்களை விற்கிரையம் ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும வில்லங்க சான்றிதழானது மேற்படி சொத்துக்களின் வில்லங்க சான்றிதழின் பதிவிறக்க நகல் என்றால் சரிதான்.

**8.** சர்வே எண்.782/26, 782/27 ஆகிய நிலங்களை ராசமூப்பன் உயிருடன் இருக்கும் போதே கோவிந்தராஜன் என்பவருக்கு விற்கிரையம் செய்துள்ளார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழானது மேற்படி சர்வே எண்களின் வில்லங்க சான்றிதழின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். **மேற்படி சர்வே எண்.782/25, 782/26, 782/27, 782/28 மற்றும் 782 ஆகிய நிலங்களின் வில்லங்க சான்றிதழின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நானும், மற்ற வாதிகளும் குடியிருக்கும் சொத்து பிரிவினை செய்யப்படாத சொத்து என்றால் சரியல்ல. சர்வே எண்.760/1L எங்களின் பூர்வீக சொத்து என்றால் சரிதான்.

9. சர்வே எண்.760/1U சொத்து கூட்டாக உள்ளதா என்றால் இல்லை. மேற்படி புல எண்களுக்கு குளித்தலை தனி வட்டாட்சியரால் கொடுக்கப்பட்ட கூட்டுப்பட்டா தவறா என்றால் இல்லை. கருப்பன் மகன் ராசன் எனது தந்தை என்றால் சரிதான். 13.10.1999 ம் தேதி எனது தந்தை எனது பெயரில் தோகைமலை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்

என்றால் கொடுத்திருப்பார். சாட்சி தற்போது யார் பெயரில் புகார் கொடுத்தார் என்று தெரியவில்லை என்று கூறுகிறார். எனது தந்தையின் கையொப்பம் தெரியுமா என்றால் தெரியும். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து எனது தந்தையின் கையெழுத்தா என்றால் இல்லை.

10. எனது தந்தை உயிருடன் இருந்த போதே அவருடன் தகராறு செய்ததால் எங்களுக்கு எதிராக புகார் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி புகாரின் விசாரணையில் நான் தகராறு செய்ய மாட்டோம் என்று எழுதி கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. ஆண்டி என்பவர் யார் என்றால் எனக்கு சகோதரர் முறை ஆகும். அவர் எனது பெரியம்மா மகன் ஆவார். ஆண்டி எனக்கு எதிராக 26.05.2000 ல் தோகைமலை காவல் நிலையத்தில் புகார் அளித்தாரா என்றால் இல்லை. எனது தந்தையின் முதல் மனைவிக்கு பிறந்த குழந்தைகளுடன் சொத்துக்காக தகராறு செய்கிறேன் என்றால் சரியல்ல.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct.

Sd/-A.Yughathymariya
**Additional District Munsif,**
**Kulithalai.**